கர்த்தரின் தாசனாகிய ஆபிரகாமின் சந்ததியே

O Descendants of Abraham His Servant

Album 26 Song 1

ஆல்பம் 26 பாடல் 1



Album 26

God’s Faithfulness & Mercy

Song 1 கர்த்தரின் தாசனகிய ஆபிரகாமின் சந்ததியே

Psalm 105 – Call to remember God’s covenant with Abraham, His faithfulness through Joseph, Moses, and the Exodus. Emphasizes God’s sovereign plan and protection of His chosen people.

கர்த்தரின் தாசனகிய ஆபிரகாமின் சந்ததியே
அவரால் தெரிந்துக்கொண்ட யாக்கோபின் புத்திரரே

கர்த்தருடைய சமூகத்தை நித்தமும் தேடுங்கள்
தேவனின் வல்லமையை என்றும் நாடுங்கள்
பரிசுத்தரின் நாமத்தை மேன்மை பாராட்டுங்கள்
ஆண்டவரின் அதிசயங்களை தியானித்துப் பேசுங்கள்

கர்த்தர் செய்த அற்புதங்களை நினைவு கூருங்கள்
தேவ வாக்கின் நியாயத்தீர்ப்பை நினையுங்கள்
கர்த்தரே நம்முடைய தேவன் என்று உணருங்கள்
கர்த்தரின் நியாயத்தீர்ப்பை பூமியெங்கும் விளக்குங்கள்

ஆயிரந்தலைமுறைக்கென்று கட்டளையிட்ட வாக்கையும்,
ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையும்
ஈசாக்குக்கு தேவன் கொடுத்த ஆணையையும்
யாக்கோபுக்கு பிரமாணமாக்கி இல்ரவேலுக்கு
உறுதியாக்கினார்.

நாடோடியாய் நாடுவிட்டு நாடுபோன ஜனங்களுக்கு
கானான் தேசத்தை உங்களுக்குத் தருவேன் என்றார்
தமது ஜனங்களை ஒடுக்காத படிக்கு

சகல ராஜாக்களையும் கடிந்துக் கொண்டார்

நான் தொட்டு அபிஷேகித்தவனை நீங்கள் தொடாமலும்
எனது தீர்க்கதரிசிக்கு தீங்கு செய்ய வேண்டாம் என்றார்
யாக்கோபின் தேசகத்திலே பஞ்சத்தை வருவித்தார்
ஆகாரமென்னும் ஆதரவு கோலை முற்றிலும் முறித்தார்

கர்த்தரின் திட்டத்தாலே யோசேப்பு விற்கப்பட்டான்
எகிப்து தேசத்திற்கு சிறைக்கொண்டு போகப்பட்டான்
ராஜா ஆள் அனுப்பி அவனை விடுவிக்க செய்தான்
தன்னுடைய ஆஸ்த்திக்கெல்லாம் அதிபதியுமாக்கினான்

இஸ்ரவேல் எகிப்து தேசத்திற்கு வந்தான்
யாக்கோபு காமின் தேசத்தில் பரதேசியாய் இருந்தான்
கர்த்தர் ஜனங்களைப் பலுகப்பண்ணினார்
எகிப்தியரைக் காட்டிலும் பலவான்களாய் ஆக்கினார்

கர்த்தரின் ஜனங்களை எகிப்தியர் பகைக்கவும்
தம்முடைய ஊழியக்காரரை வஞ்சனையாய் நடத்தவும்
அடிமைப்பட்ட தமது ஜனத்தை விடுவித்திட
எகிப்தியரின் இருதயத்தை தேவன் மாற்றினார்

கர்த்தரின் தாசனாகிய மோசே ஆரோனை அனுப்பினார்
காமின் தேசத்திலே அற்புத அடையாளங்களை செய்திட்டார்
அடிமை தேசத்திலிருந்து ஜனத்தை புறப்படச் செய்தார்
ஆபிரகாமோடே செய்த உடன்படிக்கையை நிறைவேற்றினார்

கர்த்தரின் தாசனகிய ஆபிரகாமின் சந்ததியே
அவரால் தெரிந்துக்கொண்ட யாக்கோபின் புத்திரரே
தேவன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றினார்
இன்றும் நிறைவேற்றுவார்.

